செய்தி வெளியீடு எண்.130 நாள்.02.03.2017

# பத்திரிகைச்செய்தி

**திருவள்ளூர் மாவட்டத்தில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தகுதித்தேர்வுக்கான விண்ணப்பங்களை விற்பனை மையங்களில் பெற்றுக்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

~~~~~

ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் அரசின் வழிகாட்டுதலின்படி ஆசிரியர் தகுதித் தேர்வு தாள்-1 மற்றும் தாள்-2 முறையே 29.04.2017 மற்றும் 30.04.2017 ஆகிய நாட்களில் நடைபெற உள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் திருவள்ளூர் மாவட்டத்தில், முதன்மைக்கல்வி அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் மையங்களில் 06.03.2017 முதல் 22.03.2017 வரையுள்ள நாட்களில் (ஞாயிற்றுக்கிழமை தவிர) காலை 09.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை விற்பனை செய்யயப்பட உள்ளன. விற்பனை மையங்கள் தொடர்பாக, மாவட்ட வாரியான விவரங்கள் ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்திலும் காணலாம். ஒரு விண்ணப்பக் கட்டணம் ரூ.50/-ஐ தொகையாக அளித்து விண்ணப்பத்தினை விற்பனை மையங்களில் பெற்றுக்கொள்ளலாம். ஒரு நபருக்கு ஒரு விண்ணப்பம் மட்டுமே வழங்கப்படும். தாள்-1 மற்றும் தாள்-2 ஆகிய இருதேர்வுகளை எழுத விரும்பும் விண்ணப்பதாரர் தனித்தனியான விண்ணப்பத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

| வ.எண் | விண்ணப்பம் விற்பனை செய்யப்படும் இடங்கள் |
|---|---|
| 1 | நகராட்சி உயர்நிலைப்பள்ளி,ஆவடி |
| 2 | அரசு உயர்நிலைப்பள்ளி,நெமிலிச்சேரி |
| 3 | அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி,திருவள்ளுர் |
| 4 | அரசு மேல்நிலைப்பள்ளி,காக்களூர் |
| 5 | நகராட்சி மேல்நிலைப்பள்ளி,இராஜாஜி சாலை திருவள்ளுர் |
| 6 | அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி,கடம்பத்தூர் |
| 7 | அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி,மணவாளநகர் |
| 8 | அரசு மேல்நிலைப்பள்ளி,ஆற்காடுகுப்பம் |
| 9 | அரசு உயர்நிலைப்பள்ளி,கீச்சலம் |
| 10 | அரசு உயர்நிலைப்பள்ளி,சுந்தரேசநகர் |
| 11 | அரசு மேல்நிலைப்பள்ளி,போந்தவாக்கம |
| 12 | அரசு உயர்நிலைப்பள்ளி,சதுரங்கப்பேட்டை |
| 13 | அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி,அம்மையார்குப்பம |
| 14 | அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி,ஆர்.கே.பேட்டை |
~~~~~

| | |
|---|---|
| 15 | தளபதி கே.விநாயகம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, திருத்தணி |
| 16 | அரசு உயர்நிலைப்பள்ளி,அமிர்தாபுரம்(மேல் திருத்தணி) |
| 17 | கோதண்டராமன் உயர்நிலைப்பள்ளி,ஊத்துக்கோட்டை |
| 18 | அரசுஉயர்நிலைப்பள்ளி,வடமதுரை |
| 19 | அரசு மேல்நிலைப்பள்ளி,சத்தியமூர்த்தி நகர் (ஆவடி) |
| 20 | நகராட்சி உயர்நிலைப்பள்ளி,அத்திப்பட்டு (சென்னை) |
| 21 | நாதன் மகளிர் உயர்நிலைப்பள்ளி,நெற்குன்றம |
| 22 | அரசு உயர்நிலைப்பள்ளி,சின்னம்பேடு |
| 23 | அரசு மேல்நிலைப்பள்ளி,பம்மதுகுளம் |
| 24 | மகாவீர் ஜெயின் மேல்நிலைப்பள்ளி, திருவொற்றியூர் |
| 25 | அரசு உயர்நிலைப்பள்ளி,மாத்தூர் |
| 26 | அரசு உயர்நிலைப்பள்ளி,மீஞ்சூர் |
| 27 | எல்.ஈ.எப் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,பொன்னேரி |
| 28 | அரசு உயர்நிலைப்பள்ளி,ஜி.ஆர்.கண்டிகை |
| 29 | அரசு மேல்நிலைப்பள்ளி,புதுகும்மிடிப்பூண்டி |

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் திருவள்ளூர் மாவட்டத்தில், முதன்மைக்கல்வி அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் மையங்களில் 06.03.2017 முதல் 23.03.2017 வரையுள்ள நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 05.00 வரை (ஞாயிற்றுக்கிழமை தவிர)திரும்பப் பெறப்படும். விண்ணப்பங்கள் வாங்கப்பட்ட மாவட்டங்களிலேயே திரும்ப அளிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஒரு மாவட்டத்தில் விண்ணப்பம் பெறப்பட்டிருப்பினும் மற்றொரு மாவட்டத்தில் பூர்த்தி செய்த விண்ணப்பத்தினை அளிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

| **வ.எண்** | **பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் திரும்ப பெறப்படும் இடங்கள்** |
|---|---|
| 1 | சி.எஸ்.ஐ.கௌடி மேல்நிலைப்பள்ளி (புதிய கட்டிடம்), கம்பர் தெரு, (கௌடி சர்ச் அருகில்) திருவள்ளூர் |
| 2 | மாவட்டக் கல்வி அலுவலகம், பொன்னேரி (அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி வளாகம், வேம்பாக்கம்) |

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**